Regd. No. M. 1288.

ஓம் பரப்பிரமணே நம:

சர்வசமய சமரஸ சன்மார்க்க சதாசாரம்

சமரஸம்

ஓர் சிறந்த தமிழ் மாதாந்த பிர[illegible]ரம்.

30 NOV 1926 MADRAS

சாது குழவி } அக்ஷய௵ புரட்டாசி௴ ஐப்பசி௴ 10௴ 11௴ 1926௵ { வயது மீ 4 5.

அகக்கண்ணாடி

1. வாய்மை
2. தங்கமணிவாசகம்
3. சமயஞானம்
   (a) ஆசாரம் நல்லொழுக்கம்
   (b) நவநீதம்
   (c) கைத்தொழில்
4. அரசியல் ஞானம்
   (a) பஞ்சாயத்து கோர்ட்
   (b) கிராம நிர்மாணம்
5. வர்த்தமானம்
6. சமூக ஒற்றுமை பாட்டு

வருட சந்தா { உள் நாடுகளுக்கு ரூ. 1—0—0
வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0 }

Edited & Published by :—

M. A. Varadaraja Mudaliar.

S. R. V. Press, Villu[illegible]

ஓம் பரப்பிரம்மணே நம:

சமரஸம்.

எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. குறள்

சுடர்	1926 வரு செப்டம்பர் மீ	வயது 1
ஒளி	அட்சய வரு புரட்டாசி மீ	மீ 4

வாய்மை—வாய்மைக்கு மாறுனது பொய், பொய்யையும் கடவுள்தான் சிருஷ்டித்திருக்கிறார். ஆனால் அதை பெரியோர் தெரிந்து கையாடுவார்கள். பொய் ஒருவர்க்கு நன்மைபயக்கும் விஷயங்களில் உபயோகப் படுத்தும் சொற்கள்; தீமையுண்டாகாத காரியங்களிலும் விஷயங்களிலும் பேசப்படுவது, விஷயத்தை உணர்ந்து கொள்ள சக்தியற்றவர்களுக்கு வேறொரு முறையில் மாற்றி சொல்வது; மெல்லிக புத்தியுள்ளவர்களுக்கு நீதி சாரங்களை கற்பிக்கையில் அவர்கள் போக்குறிக்குத்தக்கபடி மிதமாகவும், இயற்கையல்லாத சில உபமானங்களையும் கட்டுக் கதைகளைக் கொண்டும் போதிப்பது; துஷ்டர்களால் ஆபத்து நேரிடும் சமயத்தில் விஷயங்களை மாற்றி சொல்வது முதலியவைகள்போன்ற சமயங்களில் பொய்யை உபயோகிக்கலாமென்பது நீதி சாஸ்திர முறை.

ஆனால் இம்முறைகள், ஆத்மசக்திவாய்ந்தவர்கள் ஒருக்காலும் அனுஷ்டிக்கப்படாது இன்பத்திலும் துன்பத்திலும் துஷ்டர்வசம் அகப்பட்டு கஷ்ட முறும்போதும் உண்மையாகவே நடந்து கொள்ள வேண்டும். பூர்ண ஆத்ம சக்தி வாய்ந்தவன் எந்த விஷயங்களுக்கும் பொய் சொல்ல வேண்டிய அவசியமிராது. உண்மை சொல்லுகிறவர்களுக்கு எல்லாரும் விரோதிகளாவார்கள், சக்தி வாய்ந்தவர்கள் இந்தவிரோதங்கட்கு பயப்படமாட்டார்கள் மனதைச்செம்மைப் படுத்திக்கொண்டவர்கள் அரசின் சுத்திற்கும் பயப்படமாட்டார்கள். பொய்யை வீண் விஷயங்களுக்கெல்லாம் அடிக்கடி உபயோகப்படுத்துவது கீழ்மக்களின்குணம் பெரும்பாலும் இந்துக்களின் குணமென்றே சொல்லலாம். மேல்நாட்டாரும், மகமதியரும் அவ்வளவு ஆபாசமான பொய்சொல்லும் முறைகளை கையாளுவதில்லை இது சரித்திரபோக்கிலும் அனுபோகத்திலும் தெரியக்கிடக்கின்றது. இந்து மதத்தில் சிறுகுழந்தையாயிருக்கும் பொழுதே பொய்ப்பாலை யூட்டுகின்றார்கள், சிறுகுழந்தைகள் அழும்பொழுதும் தவரான காரியத்தைச் செய்யும் பொழுதும் அவர்களை அடக்கவழி தெரியாமலும் கடிந்துக்கொள்ளாமலும் சந்தோஷமான முறையில் அக்குழந்தைகளையடக்க முயற்சி செய்வதில் பூச்சிகாட்டி[illegible] பிசாசு பிடித்துக் கொள்ளுமென்னும் தகாத மொழியை உபதே[illegible]கிறார்கள். அப்படிச் செய்வது சுத்த தவராகும். ....

தங்கமணி வாசகம்.

சமரஸம்:—நான்கு வேதங்களும் அதன் சாரங்களும் உலகம் உள்ளளவும் இழியாது அதன் ஓர் வசனமும் பொய்ப்படாது. அது போலவே வேதத்திலுள்ள நான்கு வர்ணாச்ரம தர்மங்களும் இப்பூமி யுள்ளளவும் குன்றாது ஆனால் பிரஜைகள் பலர் வேத வசனத்தின் அர்த்தத்தை அனர்த்தமாகக் கொண்டும் வர்ணாச்சிரமத்தை மறைத்து துராச்சார வர்ண சங்கிரகம் செய்துகொண்டும் உழலுவர் சுத்தம், ஆசாரம் என்பவைகளைக் கொண்டு பிரித்துள்ள ஆயிரக்கணக்கான ஜாதிபேதங்கள் இந்துமதத்தில் வேத பெருமையை குன்றச் செய்வதோடு இஸ்லாமதமும் கிறிஸ்து மதமும் அதையழிக்க தலைவிரித் தாடுகின்றன. இந்து ஜனங்களை அல்ல, இந்துவேதத்தை யழித்துப்போட அம்மதங்கள் பகீரத பிரயத்தனங்கள் செய்துவருகின்றன, நீங்கள் அறியாமையினாலும், அற்ப ஆசையினாலும் தேவர்களாலியற்றிய வேதத்தை எதிரிகள் நகைக்கும் படியாக சாவு குழிதோண்டி விட்டீர்கள். மகாத்மாஜீ இச்சாவு குழியை மூடிவிட்டார் இனியாவது நீங்கள் இந்துவேத பெருமையை அறிந்து ஜாதிபிரிவுகளெல்லாம் விலக்கி சமரஸ பானமை ஏற்பட்டு ஒன்றுபட்டு வாழுங்கள்.

பிராமண ஜாதியிலும் அசேதக பஞ்சம ஜாதியானைப் போன்ற ஆசார முள்ளவர்களிருக்கிறார்கள், ஒவ்வொரு ஜாதியி[illegible] ஆசார முள்ளவர்களும் நற்[illegible]ர் ளாயிருக்கிறார்கள், அ[illegible]வொரு ஜாதியிலும் கெட்ட குணமும் துராச்சார முள்ளவர்களும் பலரிருக்கின்றார்கள். ஜாதி பகிஷ்கார முறைகளும் பிளவுகளும் 1200 வருடங்களுக்கு பின்னிருந்து வளர்ந்து வந்திருப்பதாக M. ஸ்ரீனிவாச அய்யங்கார் M. A. அவர்களின் தமிழ் ஆராய்ச்சியில் காணக்கிடைக்கின்றது, அதில் அவர் எழுதியிருப்பதாவது ஒவ்வொரு ஜாதியும் அதன் தொழில் முறையிலிருந்தே பிரிவு படித்தியிருப்பதாக தக்க உதாரணத்தோடு கூறியிருக்கின்றார், 1200 ஆண்டுகளுக்கு முன்னர் திராவிடர், ஆரியர் என சில முக்கியமான வகுப்பார் வசித்திருப்பதாக சொல்லியிருக்கின்றார் பின் காலத்தில் தவரான முறைகளை அனுஷ்டிப்பவர்களை அவர்கள் தங்கள் கூட்டத்திலிருந்து பிரத்தியேகமாக விலக்கி இருக்கிறார்கள் ஒவ்வொரு கூட்டத்திலிருந்து விலகினவர்களெல்லாம் ஒ[illegible] பெரியஜாதிக்கு தலைவனாகி விட்[illegible]கள் இவ்வாறே காலக்கிரமத்தி[illegible]தி பிரிவுகள் வளர்ந்துக்கொ[illegible] வந்துவிட்டன 10 வருடங்க[illegible]தான் ஜாதி பிரிவுகள் புதிதாக [illegible]லிருந்து தடைப்படுத்தப்பட[illegible] ஆங்கில சட்டத்தின் ருசி[illegible]ந்து கொண்ட கீழ்மக்கள் [illegible] தவரான செயல்களையும் உ[illegible]களையும எதிர்க்க ஆரம்பித்த[illegible]ணமாகும், இனிவரும் காலத்[illegible]சாரமும் நாகரீகமுள்ளவர்க[illegible] ஜாதியினராகவும் அவைகள்[illegible]தவர்கள் ஓர்ஜாதியினராகவும் [illegible]தான்று வார்கள் போலிருக்கின்[illegible]

எதிர்காலதீர்க்க தரிசனம்.

இனிவரும் எதிர்காலத்தில் ஜாதி வித்தியாசக்கட்டு அறுந்துவிடும் என்பது திண்ணம். இவ்விஷயங்களில் பிராம்மணர்கள் ஒத்து நடப்பார்கள் அதற்கு வேண்டிய முயற்சிகளும் செய்வார்கள். ஆனால் சில பௌடிக கீழ் ஜாதியார் இவைகளுக்கு குறுக்கிட்டு துன்பப்படுகின்றார்கள். காரணம் பிராம்மணர்கள் நவீன நாகரீகத்தில் முன்னேறியிருப்பதுதான் கீழ் ஜாதிகள் கல்வியிலும், சாஸ்த்ர ஆராய்ச்சியிலும், மேல்நாட்டு கூட்டுறவிலும் ஈடுபடல் வேண்டும், பிரட்டி மீன்பிடிக்குங்காலம் போய்விட்டது.

பொதுப்பான்மை,

தர்மம், ஜீவகாருண்யம் பூததயை உபகாரம், பொது நலம், முதலியவைகள் ஓர் பொருள் சொற்களாயிருந்தாலும் பொதுப்பான்மை அல்லது தேசாபிமானம் சமூகத்தையும் மற்றும் சமயத்தையும் தூய்மைப்படுத்தக் கூடியதாயிருக்கின்றன ஈகை, உபகார முதலியவைகளைக் காட்டிலும் பொதுப்பான்மையினால் ஆவிக்கும் ஹானி ஏற்படும். அரிச்சந்திரன், சிபி, பலி, கர்ணன், முதலியவர்கள், பொருளையும், தேகத்தையும் உயிரையும் தானம் செய்தார்கள் இவர்கள் தர்மத்தை நிலைநாட்டவும் ஜீவகாருண்ய மேலீட்டினாலும் செய்திருக்கின்றார்கள் ஆனால் பொதுப்பான்மையின் பொருட்டல்ல. கிருஷ்ணன், அனுமார், லட்மணன், முதலியவர்களிடத்தில் பொதுப்பான்மை காணப்படுகின்றன. பொது நலமென்பது தன் மதத்துக்கும் தன் நாட்டுக்கும் பொது ஜன நன்மைக்காக உழைப்பது. அசத்தியத்தை எதிர்த்து நிற்பது. அற்ப ஜீவன் முதல் தேவர்களாயிருந்தாலும் அதர்மத்தை கடைபிடித் தொழுகுவாயின் அவர்களை எதிர்த்துநிற்பதும். அவைகளினாலுண்டாகும் தேக சிரமமும் உயிர் ஹானியும் ஏற்றுக்கொள்வதுதான் கிறிஸ்தும் அவரது அடியார்களும் பொது நலத்தின் பொருட்டு உழைத்து உயிர் விட்டார்களே! இவர்கள் தங்கள் உயிரைக்கொடுத்த ரத்தத்தின் பெருக்கினால் இப்பொழுது மேல் நாடுகள் உன்னத நிலைமையில் தாண்டவமிடுகின்றன இப்பொழுதுகூட வெள்ளைக்காரர்களில் பலர் தங்கள் தேசத்துக்காகவும், சத்தியத்துக்காகவும் உயிரைவிட தயாராயிருக்கின்றார்கள்.

ஜீவகாருண்யம்.

பூததயை தன்னுயிரைப்போல் மன்னுயிரையும் பாவிக்கும் குணம். எறும்பு முதல யானை ஈறாகவுள்ள 84 லக்ஷம் கோடி ஜீவபேதங்களிலும் ஆண்டவன் பிரசன்னமாயிருப்பதால் ஜீவர்களுக்கு அகதியுறும்போதும் இடுக்கண் வாய்ப்படும்போதும் காப்பாற்றுகிறவனெவனோ அவன்தான் ஜீவகாருண்ய தப்பதி. அதாவது பிராம்மணன்தாம் எவ்வித நன்மைகளை யடையவேண்டுமென்று எண்ணுகிறானோ அவைகளை மற்ற

வர்களுக்கும் செய்யவேண்டாமா? நாம் செல்வம், பெருமை, மேன்மை, சுகம் பிறருதவி இவைகளை வேண்டுகின்றோமல்லவா? மற்றவர்களுக்கும் அவ்வித உணர்ச்சி இருந்தேதீரும். அவர்கள் இஷ்டங்களை குறிப்பாலறிந்து பூர்த்தி செய்யாவிட்டால் கடவுளின் தயவு எவ்வாறு கிடைக்கும் ஒருவன் எல்லாவுயிர்களையும் எவ்வளவுக் கெவ்வளவு நினைத்து வசப்படுத்துகிறானோ அவ்வளவு கடவுளின் ஆசக்தியை பெறுகின்றான். அதாவது எல்லாவுயிரிடை யிலங்கும் கடவுள் அருளை நேசித்துவிடுகின்றான். அவ்வாறு உயிர்களின் சக்தியை ஆகரஷித்துக்கொள்ளும் சக்திமான்கள் தான் ஜீவகாருண்ய தப்பதிகள் என்றழைக்கப்படுவர் ஒருயிர்பிணிகளாகிய புல், பூண்டு, விருஷங்களையும் வேறொரு உயிர்க்காதாரமன்றியில் வெட்டினாலும் பாபம் சம்பவிக்கும். தொடரும்.

ராஜ நீதி.

ஆங்கில அரசாங்க காலத்தில் எல்லா நீதிகளும் சட்டங்களாக திரட்டப்பட்டு புஸ்தகங்களாக கோடிகணக்கி லடங்கியவை பீரோக்களில் அடைக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது இருக்கும் சட்டங்கள் உலகமக்களுக்கே சரியான வழியில் நடைபெறுவதற்கு போதுமானதாக யிருக்கின்றன. அப்படி யிருந்தும் 100ரில் 1 பங்கு கூட நியாயம் கிடைக்கவில்லை. என்? சட்டம் வேறு, நீதி வேறு; ராஜாங்கத்தார் சட்டத்தை நியாயப்படி இயற்றிதான் கொடுக்கமுடியும் நேரில் விசாரிப்பதற்கு தற்காலமுறை இயலாத காரியமாயிருக்கின்றது. அரசனிலிருந்து தோட்டி வரைக்கும் நியாய பரிபாலன அங்கத்தனர்கள் நிறைந்திருக்கின்றனர். கடவுளின் அருளால் மனித வர்க்கத்துக்கு நியாய புத்தியை அருளியிருக்கின்றார். ஒவ்வொரு மனிதனும் நீதியை சுலபமாக வழங்கலாம் அதற்காக அரசாங்க சட்டத்தை எதிர்பார்க்க வேண்டியதில்லை. அதிகாரிகளை எதிர்பார்க்கும், அதிகார ஸ்தானத்திலிருப்பவர்கள் நியாயத்தை கடந்து நடப்பவர்களுக்குதான் அந்த சட்டத்தை எடுத்தாள வேண்டும் நினைத்த காரியத்துக்கெல்லாம் மௌடீக ஏழை மக்களிடத்திலும் பெரும்பாலும் சட்டத்தை பிரயோகப்படுத்தப்படாது ஏன்? சட்டம்வேறு நீதி வேறு மனித ஜாதி காரியங்களை நடத்திக்கொண்டு செல்லுகையில் ஒரு ஜீவனுக்கும் ஹிம்சை யில்லாத முறையை மட்டுந்தான் ஒருவன் கவனிக்கமுடியும், பரிபாலன முறையையும் ராச தந்திர முறையையும் ஓர் இல்லரவாசி கவனிக்க முடியுமா அம்முறைகளை தெரிந்தவர்கள் தங்கள் அறிவை துன்மார்க்க முறையிலும் கீழோரை ஏமாற்றுவதிலும் செலவிடுகின்றனர் கீழோரும் நாளடைவில் பழகிக்கொண்டு அனுபோகத்தின் கீழ் தனக்கு தெரியாதவர்களிடத்தில் தாங்கள் தெரிந்துக்கொண்ட சட்ட ஞானத்தை காட்டியிருக்கின்றனர். இவ்வாறு சட்டத்தை மீறி நீதியை துர்வினியோகம் செய்து விடுகின்றனர். சுமார் 10 வருஷமாக எங்கும் கூக்குரல் கலகம் அடங்காமை அமைதியின்மையே அதிக

பாய் விரிட்டநூகின்றமை காரணம். அதிகாரிகள் நீதியை கையாடாமையே சட்ட ஞானமில்லாத பிரஜைகளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக நியாயத்தில் சுட்டி காட்டலாமே யொழிய அடியோடு சட்டத்துக்கு திருப்பினால் ஜனங்கள் நிரபராதிகள் குற்றமாக்கப்படுவர். உண்மை சம்பவங்கள் கிராசுக்கு பதில் சொல்லமுடியாத நிலைமையில்தான நடைபெறுகின்றன. யூகித்து ஓர் குற்றத்தை நடத்திவிடுகின்றவன் தான் நியாய சபையில காப்பாற்றப்படுகின்றான். ஏனெனில் யூகித்து செய்கிறவன் சட்டப்படி வாயாடித்தனம் படைத்திருப்பவனாகையில் அவன் குற்றத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. பிடித்தாலும் சட்டம் இடங்கொடுக்கவில்லை என்னும் நிலைமையில் அதிகாரிகள் மயங்கி திகைக்கிறார்கள். அவர்களிடத்தில் சத்யமும் எதிரிக்கு நடந்தது தனக்கு நடந்ததைப்போல் பாவிக்கும் எண்ண மிருந்தாலல்லவோ? லஞ்சம் என்னும் உக்ராகத்தை கழட்டினாலன்றோ! நியாயத்துக்காக மேல் உத்தியோகஸ்தரிடம் போராட கல்வியும் தைரியமு மிருந்தாலல்லவோ என செய்வார்கள் பாவம்! ஆக்ஷிமுறையில் அவர்களுக்கும் ஜவாப்தாரி மோதிரத்தை கொடுக்கவில்லை. தொடரும்.

நட்பு—சிநேகம் சிநேகத்தில் இருமுறைகளுண்டு அவை இயற்கைசிநேகம், செயற்கை சிநேகம், இயற்கை நட்பானது தான் பிறந்து வளர்ந்த உள்ளூர் உறவினரோடு நட்பு பூண்டிருந்தல். செயற்கை சிநேகம் கல்வி கேள்விகளால மிகுந்து தக்க சிநேகபாவ முள்ளவனிடத்திலும் பொது ஜனங்களிடத்திலும நட்பு பூண்டிருப்பது இயற்கை சிநேகம் எல்லா ஜீவர்களும் செய்கின்றார்கள மனிதர்கள் செயற்கை சிநேகத்தையே பெரிதும் பாராட்டல வேண்டும, செயற்கை நட்பு இருகூறு பட்டது ஒன்று தனக்கு ஆபத்தில் தன்னுயிரைப்போல் பார்க்கும்தக்க ஒருவனை ஆராய்ந்து சிநேகம் செய்துகொள்வது சன்மார்க்க சங்கங்களில் நட்புகொண்டு கூடி உழைப்பது பொது உரிமையின் நட்பாகும் ஓர் நண்பனைதான் முகவில் அடைய வேண்டுமானால் அவன் செயற்கையை முறைப்படி யறிந்து சிநேகம் செய்தல் வேண்டும், பிறகு இருவரும் தாங்கள் செய்யவேண்டிய காரியங்கள் இன்னதென்றுணர்ந்துவாழ்விலும் தாழ்விலும் பிரியாவிரதம் பூண்டு நிற்றலே நட்பாளர்க்கு அழகாகும் அவ்வாருள்ளன்புள்ள நண்பினரைக்கண்ட பகைவர்கள் அஞ்சி அவர்களிடத்தில் தங்கள் தந்திர செய்கைகள், சூது சண்டை முதலியவைகளை தொடங்கார்கள்.

உழவு—ஏர் உழுதல் இது வேளாண்மை செய்தல் ஏருடையாருக்குதான் கூடுமானதால் வேளாண்மை யென குறிக்காமல் உழவுயென்னும் தலையங்கமிடப்பட்டது உழவு எல்லாதொழில்களிலும் தலையாயது. உலகத்தின் தொழில்களுக்கு உணவு ஊட்டி தாயைப்போல் காப்பாற்றவல்லது. மற்ற தொழில்களால் பொருள்களை சம்பாதித்த விடத்து உணவின் பொருட்டு உழுவாரை யடையவேண்டுதலால்

ஓதுவாரெல்லாம் உழுவார் தலைக்கடையி லென ஆன்றோர் கூறியுள்ளார்கள் மற்றத்தொழில்கள் வருத்தமில்லையாயினும் அவைகள் கீழ்த்தொழில்கள் நூல்கள் கூறுகின்றதோடு அநுபவமும் அவ்வாறே யிருக்கின்றன. உழுது பயிரிடுகிறவர்களை அச்சாணியாகவும் உலகத்து மற்றஉயிர்களை இரதமாகவும் தெய்வப்புலவர் வகுத்திருக்கின்றனர்.

கைத்தொழில்—மானிடதேகம் தாங்கியுள்ள ஆத்மாக்கள் ஒவ்வொன்றுக்கும் கைத்தொழிலிருப்பது அதன் பெருமையை விளக்கும் கண்ணாடியாயிருக்கின்றது. அரிய ஆசனத்தில் வீற்றிருக்கும் சீமானாயினும் கைத்தொழில் இன்மையேயல் சரீரசுகமும் மனசுகமும் பெறமுடியாது. கைத்தொழிலில்லாதவன் மூடவனுக்கு சமதை கைத்தொழிலில்லாதவனுக்கு கொடுக்கும் குணமிருக்காது தம்மிடத்திலுள்ள பொருள்களை செலவிட்டு விட்டால் பிற்காலத்தில் எப்படி பிழைப்பது என்று கவலைகொண்டு பயந்து பணத்தை புதைத்து வைத்துவிடுகிறான் நல்லுணவும் உடையு நுகர்வதில்லை. தொழில் வன்மையில்லாதவன் தன் கீழ் வேலை செய்யும் தொழிலாளிகளை பரிபாலிக்க ஆற்றலில்லாதவனாய் தொழிலாளிகளால் ஏமாற்றப்படுவான் தேகத்துக்கு பலத்தைக்கொடுப்பது புசிப்பானவுணவல்ல தொழிலே யென்பது வெள்ளியங்கிரி.

முயற்சி—ஊக்கம் ஊக்கமில்லாதவன் தரித்திரனாவான் முயற்சி திருவினையாக்கு மென்பது பொய்யா மொழியன்றோ! ஊக்கமுள்ளவன் எப்பொழுதும் அழியாத செல்வமுள்ளவனாகவே யிருப்பான் அதாவது ஏராளமான பொருள்களையும் உணவுப்பண்டங்களையும் சேர்த்துவைத்து விட்டு அவைகள் அழியாமல் நிறைகொண்டிருப்பவனல்ல, தினந்தோறும் முயன்று சம்பாதித்து ஜீவனம் செய்பவனாயினும் ஊக்கமுடையவன் எப்படியாவது சம்பாதிக்க முடியுமென்கிற தைரியமும் நம்பிக்கையுமுண்டு. காரணம் விடாமுயற்சியே யாகும்.

சன்யாசி—நெடுங்காவிபணிந்து இல்லறசுகம் வேண்டாமென்று வெறுத்தவர்கள்போல் ஆஷாட பூதியணிந்து உருத்திராக்ஷ தண்டம், புலித்தோல் சமயமாய்த்தரித்துலவும் அகக்கள்ளா பொய்யான ஞானிகளா! தன்னையறிந்த ஞானிகளா! அன்று அன்றுஇவர்கள் நீச்சனிலும் கீழான ருத்திராக்ஷ பூனைகள் எவன் சன்யாசியோ! எவன் இல்லறத்தை துறந்துவிட்டானோ? அவன் மறுபடியும், இல்லறவாசிகளின் திரேக கிரமத்தினால் ஆசைப்பெற்ற உடை உணவுகளை புசித்தலும் உடுத்தலுமாகாது இராமலட்சுமணர்கள் இல்லறத்தை துறக்கும்போது எவ்வேடம் பூண்டனர்? தங்கள் தவம் முடியும் வரையில் மனிதர்களிடை திரிந்துகொண்டிருந்தனரா? இல்லை, இயற்கை உடைகளையும் இயற்கை உணவுகளையும் அநுபவித்து காட்டில் வசித்து வந்தார்கள், ஆகவே சன்யாசி ஞானம்

பெற்றவர்களல்ல இல்லற ஞானிகள் வைராக்கியத்தின் பொருட்டு காடு உறைந்தவர்கள் இப்பொழுது கல்வி நாகரீகம்பெற்ற உலகத்திலே திரிந்தும் சன்யாசி ஞானிகள் அவர்களை காட்டிலும் கண்டிப்பான முறையை கையாடவேண்டிய சாஸ்திர முறையிருக்க அவர்கள் வீதிதோறும் சென்று யாசித்தும் இருடியும் தந்திரமான முறைகளால் பயக்கியும் வெட்கங்கெட்ட கட்டைகளாய் தோன்றுகிறார்கள். அவர்களிடத்தில் ஞானமும், யோகமுமன்றி சிறிய அறிவும் கிடையாதவர்பலர். ஜனங்களுடைய நன்மையையும் உதவியையும் பெற விரும்புகிறவன் பொதுஜன நன்மைக்காக உழைக்கவேண்டும். அல்லது ஏதேனும் ஓர் உயிருக்கு பிரயோஜனமான காரியத்தில் ஈடுபட்டிருத்தல் வேண்டும். இலாவிட்டால் பாவம் சோம்பேறியாய் திரிந்து சனங்களிடத்தில் யாசித்து வயிறுவளர்ப்பவனெவனும் அக்கடனை தீர்க்கபிறகு அவர்களிடத்தில் மறுபடியும் பிறந்து கஷ்டப்படவேண்டியது சாஸ்திர முறை. இந்த போலி சன்யாசிக்கு இடுகிறவர்கள் பசுவாகவும் அதைவாங்கி வயிறு வளர்க்கிறவர்கள் எருமை கடாவாகவும் பிறப்பார்கள் என்பதை நீதி சாஸ்திரம் விளக்குகிறது

இரத்தல்—பிச்சை யெடுப்பது மிகவும் இழிவானகாரியம் ஜென்மாந்தரங்களில் மாபாவங்கள் செய்தவர்கள் தான் பிச்சைக்காரராய் பிறந்து வருந்தப்பட வேண்டியிருக்கிறது. பழைய வினை அப்படியாயிருந்தாலும் இந்த ஜன்மத்திலாவது, பிச்சை யெடுக்காமல் தேகத்தை வருந்தி கஷ்டப்பட்டு ஜீவித்தால் பழைவினை தேய்ந்துபோகும ஜன்மாந்தரங்களில் சோம்பேறிகளாய் திரிகிறவர்கள்தான் இவ்வேஷத்தோடு ஜனிக்கிறார்கள். இனியும் உண்மை யறியாமல் யாசித்தால் கீழ் ஜன்மங்களடைக்கும். ஒருவன் கஷ்டப்பட்டு காமம் செய்யாமல் மேலான பதவி கிடைப்பதில்லை நிதாசாரம்.

கயவர்—கீழ்மக்கள் சமயஞானம், அறவழிஞானம், அரசியல் ஞானம், உலகப்போக்கு முதலியவைகளில ஏதேனும் ஓர்வித அறிவை யாவது பெற திறமையில்லாதவன் சண்டாளனென்று முன்னோர் கூறியுள்ளார்கள் அவன்தான் தீண்டாதவன் மனிதர்களைப்போல் உருவமிருந்தாலும புலியை காட்டிலும் கொடுமையானவர்கள்.

மருந்து—நோய் தீர்ப்பதற்கு வேண்டிய பரிகாரம். பலதேசங்களிலிருக்கும் வைத்திய முறைகளில் இந்து வைத்திய முறைகள்தான் புராதனமானது ருக்குவேதத்தின் ஆரம்ப கீதங்கள் மூலிகைகளின் விசேடத்தையும் அவைகளின் சக்தியையும் பற்றி விவரித்திருக்கின்றன இந்து வைத்திய புஸ்தகங்களில் கண்வைத்தியம், ரத்தகுழாய் நாடி. இவைகளை விவரிக்கும் நிதான சாஸ்த்திரம் ரணவயித்தியம், குடும்ப வைத்தியம தேகத்தை கிழித்து தைப்பது முதலியவைகள் வெளிப்படையா

யும் அனுபோகமாயும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த வைத்தியத்தின் மூலகர்த்தா சூரியன்.

சர்க்கா—இராட்டினம் இராட்டை யென்று திரியும். பயிரிடுவதற்கு இரண்டாவதான தொழிலில் மேலானது செய்யுந் தொழிலிலே நெய்யுந் தொழிலல்லது "நுண்ணறிவுபெற வேண்டின் நூலை நூறகவேண்டும்" யென்பது பண்டைமொழிகளல்லவா ! லோகாந்தரங்களில பிரதி பலிக்கும் பொருள்களில் முக்கியமானது, சந்திரன், சூரியன், உடுக்கள், சக்கரம் இராட்டினம் பணம் ஐந்துவப் பெயர்கள். இவ்வுருவமுள்ள பெயர்களில் சத்தியம் தங்கிநிற்கும், இப்பொருள்கள் சத்தியத்தின் வேலியைக் கடப்பதில்லை இப்பொருள்களின் மகிமை உலகம் உள்ளவரையில் மங்காது அவைகள் அழிந்தும் போகாது பாருங்கள் சூரியன் உலக முதித்தது முதல் தன்தொழிலை கணமும் தரியாது செய்கின்றான் வண்டிகளிலும் இரதங்களிலுமுள்ள சக்கரங்கள் கடையாணி இல்லாதபோது சாய்க்கு நிமிர்வு வரும் வரைக்கும் விழுவதுண்டா ! இவைகள் போலவே சர்க்கா இராட்டையும் ஓர் சத்தியம் பிறவாதபொருள் அது அழியாமல் தன்வேலையை செய்துகொண்டிருக்கும், அதை அடைகிறவர்களும் சுற்றுகிறவர்களும் சத்தியத்தையும் சன்மார்க்க வழியையும் கடந்துபோக மாட்டார்கள்

காலதர்மம்—யுகங்கள் தோறும் தர்மங்கள் மாறிக்கொண்டே வருகின்றன இந்த யுகத்துக்கும் காலதேச வர்த்தமானத்துக்கும் தக்கவாறு தர்மத்தை நடத்துவதுதான் மேலோர் செய்கை. கீழ்மக்கள் மூடத்தனமாக செம்மறியாட்டைப்போல் ஒரே போக்காகவே போய்க்கொண்டிருப்பார்கள் தாங்கள் சம்பாதிப்பதும் துன்மார்க்க முறையில் பின்னர் செலவிடுவதும் துன்மார்க்க முறையிலேயே நடைபெறுகின்றன. உயிர்களுக்கு ஏற்ற சமயத்தில் நிலைமை யறிந்து உதவி புரிவதே சிறந்த தர்மமாகும், உலகவிகாச முறையில் ஒவ்வொரு தர்மத்தை செய்துக்கொண்டிருக்கும் உயிர்களுக்கு அகஸ்மாத்தாய் தெய்வகதியால் நேரிட்டிருக்கும் ஆபத்திலிருந்து கரையேற்றிவிடுவதுதான தர்மத்தின் இலக்கணம் சந்திரமதியை சோதிக்க காசிராஜன் பிள்ளையை எதிரில் கொண்டுவந்து போட்டதுபோல் நாமை சோதிக்கச் சுற்றியுள்ளவர்பல வித இடையூறுகளில் தோய்க்கப்படுகின்றார்கள் அவற்றைக்கண்டு நாம் இறங்காமல் போகுமிடத்து நமது செயலை அறிந்து முடிவு செய்துவிடுகிறார் ஆங்கிலேயர் எப்பொழுதும் இவ்வித தர்மத்தைதான் செய்வார்கள் இந்துக்கள் செய்யவேண்டுமானல் அன்னதானத்தை மாத்திரம் சிலர் செய்வார்கள், பிள்ளை அப்பம் யென்றால் கல்லைக்கொடுக்கும் முறையில் பயின்றவர்கள்.

சமய ஞானம்.

ஆரோக்கியமும், ஆச்சாரமும்.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்த நான்கையும் அடைதற்குக் கருவி சரீரம் ஆதலினால், மரணபரியந்தம் தங்கள் தங்கள் சரீரத்தை வியாதி அடையாவண்ணம் பாதுகாப்பது யாவருக்கும் ஆவசியகம்; ஆகையாற் சரீரத்தை ஆரோக்கியமுடையதாகப் பாதுகாக்கு முறைமைகளைச் சொல்வாம்.

நாடோறும் சூரியோதயத்துக்கு முன்னே விழித்தெழுந்தால் புத்தி தெளிவடையும்; நரம்புத்துவாரத்து நீர் சுத்தியுறும்; பித்தம் நீங்கும்; வாதபித்தங்கள் தத்த நிலையைப் பொருந்தும்.

காலையிலே சிலம்பமேனும் குதிரை ஏற்றமேனும் கானடையேனுஞ் செய்து கொண்டு வந்தால் சரீரம் இறுகும்; பசி உண்டாகும்; வாதமும் கபமும் வலியும் சூலையும் நீங்கும்; மலம் இறங்கும்.

காலந்தோறும் ஒழுங்காகப் போசனஞ்செய்து கொண்டுவருதல் போலவே, அதினின்று பிரியும் மலசலாதிகளை ஒழுங்காக மோசனஞ்செய்துகொண்டு வருதலும் ஆரோக்கியத்துக்கு ஏதுவாகும். நாடோறும் காலை மாலை என்னும் இரண்டு நேரத்தினும் தவறாமல் மலமோசனஞ் செய்யும்படி பழகிக்கொள்ளல் வேண்டும். இடையிலே மலசல மோசனஞ்செய்ய வரினும் தடைப்படாது செய்தல் வேண்டும். மலசலங்களை அடக்கினால், வியாதி உண்டாகும். மலசலம் தங்காது இறங்குமாயின் வாதபித்த சிலேஷ்மங்கள் தத்தநிலையைப் பொருந்தும். சமாக்கினி உண்டாகும்; வியாதிகள் அணுகாவாம். சமாக்கினியாவது திருப்தியாக உட்கொள்கின்ற அன்னபானீய முதலியவைகளையெல்லாம் முறைமைப்படி காலவளவைக்கு மாறுபடாமல் நன்றாகத் தகிக்கும் உதாக்கினியாம்.

இயல்பாகிய துவர் உள்ள தூள் இலை கோம்பு என்பவைகளினாலே பல்லின் உள்ளையும் புறத்தையும் செவ்வையாக விளக்கல்வேண்டும் இப்படி விளக்கினால் வாதபித்த சிலேஷ்மங்களினாலே பல்லினிடத்தும் அதன் வேரினிடத்தும் உண்டாகின்ற இருபத்துமூன்று ரோகங்களும் உண்டாகாவாம் பற்கள் அசைவில்லாமல் உறுதியாய்

இருக்கும். செங்கல், மணல், கரி, பாளை, வைக்கோல் என்பவை களினாலே பல்விளக்கலாகாது.

சரீரத்தில் உள்ள மயிர்க்கால்கள் வழியாக வேர்வையாய்க் கழியும் அழுக்குகளெல்லாம் இரத்தத்தினின்று தடையின்றிப் பறியும் பொருட்டு, நாடோறும் ஒழுங்காகச் சரீரத்தைத் தேய்த்து ஸ்நானம் பண்ணிக்கொண்டு வரல் வேண்டும்.

ஸ்நானத்துக்குப் பிராதக்காலமே உத்தமகாலம். பிராதஸ்நானஞ்செய்தால், பசி உண்டாகும்; நோய் அணுகாது. வெந்நீரிலே செய்யும் ஸ்நானத்தைப்பார்க்கிலும், தண்ணீரிலே செய்யும் ஸ்நானமே உடம்புக்கு அதிக உறுதியைத் தரும்.

சூரிய சந்திரகிரணம் படாத நீரும், காற்றுப்படாத நீரும், பசிநீரும், அதிக சேறுள்ள நீரும், இலைஉதிர்ந்த நீரும், புழு உள்ள நீரும், துர்கந்தமுள்ள நீரும் வியாதிகளை விளைவிக்கும். ஆதலினால் இவைகள் ஸ்நானம் சமையல் பானம் என்பவைகளுக்கு ஆகாவாம்.

ஸ்நானம் பண்ணி நெடுநேரம் ஈரத்தோடிருக்கலாகாது. உடம்பிலே ஈரஞ்சுவறினால், குளிர் உண்டாகும்; அதினால் வியாதி உண்டாகும். ஆதலினாலே, குளிர் வியாதியும் உண்டாகாவண்ணம் சீக்கிரம் ஸ்நானம் பண்ணி, அது முடிந்தவுடனே உடம்பிலே சற்றும் ஈரமில்லாமல் துடைத்துவிட்டுத் தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்துக் கொள்ளல் வேண்டும். உடுத்த வஸ்திரம் நனைந்தால், உடனே அதைக் களைந்துவிட்டு, வேறு உலர்ந்த வஸ்திரந்தரித்துக் கொள்ளல் வேண்டும்.

மனமுயற்சியாலேனும் சரீரமுயர்ச்சியாலேனும் உடம்பு இளைத்திருக்கும்பொழுதும், போசனஞ்செய்த உடனும், ஸ்நான பண்ணலாகாது. பிள்ளைகள் காலையிலே ஸ்நானம்செய்யாது போசனம் செய்தால், ஐந்து நாழிகை நேரத்திற்குபின்பு ஸ்நானம் பண்ணல் வேண்டும்.

உடுக்கிற வஸ்திரங்களும் சயனிக்கிற படுக்கைகளும் சிறிதும் அழுக்கில்லாமற் சுத்தமாயிருத்தல் வேண்டும். சரீரத்தினின்றும்

வெளிப்படும் அழுக்கானது வஸ்திரம் மெத்தை தலையணை முதலியவைகளில் ஒட்டிக்கொள்ளும் அவைகள் தோலோடு சம்மந்தப்பட்டால், அவைகளிலே படிந்திருக்கின்ற அழுக்கானது மயிர்க்கால்களை அடைத்து வியாதியை விளைவிக்கும். படுக்கைகளை நாடோறும் காற்றிலே போடல் வேண்டும்.

காலந்தோறும் ஒழுங்காகப் போசனஞ்செய்துவரல் வேண்டும். அகப்பட்ட பொழுதெல்லாம் போசனஞ்செய்யலாகாது. முன்புசித்த போசனம் முழுதும் சீரணமாகி மிகபசி தோன்றிய பின்பு போசனஞ்செய்தல் வேண்டும். இப்படிச் செய்யாதொழிந்தால், புசித்த போசனஞ் செவ்வையாகச் சீரணமாகாது அதுமட்டோ பக்குவாசயத்திலே சிறிது ஜீரணமாய் போசனம் பின்பு புசித்த போசனத்தோடு கலந்து வியாதியை விளைவிக்கும்.

போஜனம் பண்ணுமிடத்து, தன் சரீரசுபாவத்தோடு மாறுகொள்ளாதவைகளையும, காலவியல்போடு மாறுகொள்ளாதவைகளையும், சுவை வீரியங்களினாலே தம்முள் மாறுகொள்ளாதவைகளையும் புசித்தல்வேண்டும். அப்படிப் புசிக்குமிடத்தும், அளவுக்கு அதிகமாகவேனும் அர்ப்பமாகவேனும் புசிக்கலாகாது. போசனம் மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் செய்யும்.

போசனஞ் செய்யும்போழுது சலபானம் பண்ணலாகாது. போசனமுடிந்தபின்பே சலபானம் பண்ணல் வேண்டும். தாகமெடுத்தாலும், மீட்டும் மீட்டும் சலபானம் பண்ணலாகாது.
அதிகசுடுகையுள்ள அன்னமும், நன்றாகச் சமையாத அன்னமும், குழைந்தஅன்னமும், ஊசிய அன்னமும் பழங்கறியும், சருணைக்கிழங்கல்லாத கிழங்குகளும் புசிக்கலாகாது.

நன்றாகச் சமைத்த துவரம்பருப்பைப் போசனத்தின் முதலிலே பசுநெய்யுடன் அன்னத்திற் கலந்து புசித்தால், ஒருபிடி அன்னத்திற்கு ஒருபிடிசதை வளரும். அன்னத்தில் இட்டுண்ணும் கறிகளோடு துவரம்பருப்புரசஞ் சேர்த்துக் கொள்வது உத்தமம்.

போசன முடிவிலே புளித்த தயிரும் உப்பும் அன்னத்திற்சேர்த்துப் புசித்தால், முன்னுண்ட பதார்த்தங்களின் உள்ள திரி

தோஷமும் நீங்கும் எல்லாபதார்த்தங்களும் சீரணமாகும். மோரும் அன்னமும் புசித்தால் பசி உண்டாகும் மேக நீரும் மூலமும் பாண்டுவும் கிராணியும் நீங்கும்.

ஊறுகாயெல்லாம் உதராக்கினியை வளர்க்கும் அருசியைப் போக்கும் வாதபித்த சிலேஷ்மங்களைத் தொலைக்கும் ஆதலினாலே, தயிர்ச் சாதத்தோடும் மோர்ச்சாதத்தோடும் ஊறுகாய் சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.

இரவிலே தயிரும், மோரும், கீரைகளும், கிழங்குகளும், கனிகளும் உண்ணலாகாது பகலிலே பால் உண்ணலாகாது. இரவில் உண்ணத்தக்க கறிகளாவன. துவரம்பருப்பு அவரைப்பிஞ்சு முருங்கக்காய் முள்ளிக்காய் தூதுளங்காய் என்பவைகளாம்.

இரவிலே சேஷித்த அன்னத்தில் ஒரு சுக்குதுண்டைபோட்டு ஆறிய வெந்நீரை விட்டுவைத்தல்வேண்டும். அந்தப் பழஞ்சோற்றைக் காலையிலே அந்த நீராகரத்தோடு புசித்தல்வேண்டும். அப்படிப் புசித்தால், வாதபித்தம் போம். தாகம் நீங்கும். பசியுண்டாகும்.

இரண்டு கால்போஜனமே உத்தமம். மூன்று காலபோஜனம் கொள்ளவேண்டுமானால், காலையிலே மூன்றேமுக்கால் நாழிகையுள்ளும் உச்சிக்காலத்திலே பதினைந்து நாழிகையுள்ளும் இராத்திரியிலே ஏழரை நாழிகையுள்ளும போஜனஞ் செய்தல்வேண்டும்.

சரீர முயற்சியேனும் மனமுயற்சியேனும் செய்து இளைத்தவுடன் போஜனம்பண்ணலாகாது. போஜனஞ் செய்தவுடனே கடுமையாகிய மனமுயற்சியேனும் சரீரமுயற்சியேனும் செய்யலாகாது. போஜனஞ் செய்தவுடனே கடுமையாகிய மனமுயற்சியேனும் சரீரமுயற்சியேனும் செய்யலாகாது. போஜனம் செய்தவுடனே நூறடி யுலாவலாகிய குறுநடை கொள்ளல்வேண்டும்.

காலை வெய்யிற் காய்ந்தால், வியாதிகளெல்லாம் அணுகும் மாலை வெய்யிற் காய்ந்தால், வியாதிகள் அணுகாவாம். நெருப்புக் காய்ந்தால் அதிக உஷ்ணமும், அதி தாகமும், இரத்த பித்தரோகமும் இரத்தக் கொதிப்பும் உண்டாகும். சுடுகாட்டுப்புகை உடம்பிலே பட்டால் ஆயுளைக் கெடுக்கும். பனியிலும், மழையிலும் பனிக்காற்றிலும் பெருங்காற்றிலும் திரிதலாகாது.

புருஷர்கள் அறியவேண்டிய சில விஷயங்கள்.

1. மாதா பிதா பாட்டன் பாட்டி முதலானவர்கள் இளமையிற் செய்த நன்றியை மறந்து தன் பெண்ஜாதியே பெரிதென நினைத்து அவர்களைக் கண்ணெடுத்துப் பாராமலிருப்பது கூடாது.

2. மனைவிக்குப் பாவமிதுவென்றும், புண்ணியமிதுவென்றும், அவற்றினுற் பெறும்பயன் இதுவென்றும் போதித்தல் வேண்டும்.

3. குதர்க்கம் பேசுதல், நிந்தித்தல், சோம்பல், காமம் அகங்காரம், வீண்பெருமை முதலிய துர்ச்செயல்கள் கூடா.

4. மனைவியிடம் தோற்றும் சிறிய சிறிய குற்றங்களை அப்போதைக்கப்போது எடுத்துக்காட்டி நீக்க வேண்டும்.

5. ஒரு நல்ல காரியத்தை நிறைவேற்ற முயலும்போதும், மற்றக்காரியங்களிலும் நேரிடும் இடையூறு, துன்பம் முதலியவற்றிற்கு அஞ்சாதிருத்தல் வேண்டும்.

6. சிறுவரைக் கண்டிக்கும்போதும், பயப்படுத்தும் போதும் இழிவான வார்த்தைகளை உபயோகிப்பது கூடாது.

7. செல்வம் வந்த காலத்தில் செருக்கடையாமலிருப்பதும், பிறருக்கு அவமானம் வாராது பேசுவதுமாகிய இவைகளை மனதில் வைத்தல் வேண்டும்.

8. வறுமையால் எவ்வளவு சிறுமைபட்டிருந்தாலும் தன்னுல் இயன்றமட்டும் பிறர்க்கு உதவி புரிதலோடு அகௌரவ காரியங்களை செய்யலாகாது.

9. யாவரிடத்திலும் அன்பாயிருப்பவனை ஏதோ காசுபனந்தானிப்படி நடக்கிறுனென்றும், அதிகமாய்ப் பேசினுல் வாயாடியென்றும் இழித்துக் கூறக்கூடாது.

10. நல்லவரெனத்தெரிந்து ஒருவரை நட்புசெய்து கொண்டால் மறுபடி எப்போதும் அந்த நட்பைக் கைவிடுதல் கூடாது.

11. மறைக்க வேண்டிய விஷயங்களுள்ள வேலையில் பிரவேசித்தால் மறைக்கவேண்டிய விஷயங்களுள்ள வார்த்தைகளையொருவரிடம் சொல்வதும் கூடாது.

12. எப்பொழுதும் பக்கத்து வீட்டுகாரர்களையும், சற்றோரையும், பெரியோரையும், துஷ்டரையும் பகைத்துக் கொள்ளுதலும், அலட்சியமாகப் பேசுவதும் கூடாது.

13. அடைக்கலம் புகுந்தவரை அன்போடு ஆதரிக்கவேண்டும் ஒருவருடைய குற்றங்குறைகளைப்பற்றி பேசக் கூடாது.

14. யாராவது ஒரு விஷயத்தைப் பற்றி கேட்குமுன் வலிய உன் மனதிலுள்ள அபிப்பிராயங்களை வெளிவிடுதல் கூடாது.

15. ஒருவனை நேரில் கண்டபொழுது முகமலர்ச்சியுடன் பேசி விட்டு அவன் போனபின்பு அவனையே இழிவாகப் பேசுதல் இழு குலத்தான் செய்கையாகும்.

16. எந்தக்காரியம் செய்வதாயிருந்தாலும் தனக்குப் பாபமாவது அகௌரவமாவது, தனக்காவது பிறருக்காவது தீங்கேனும் நேரிடாவண்ணம் தனக்குள் சிந்தித்துத் தன் தீர்மானபடியே செய்ய வேண்டும்.

17. ஏழைகளிடத்திலும், நமக்குக் கீழ் ஜாதியாரிடத்திலும் அன்பும், இரக்கமும் முகமலர்ச்சியுங் காட்டிப் பேசுதல்வேண்டும்.

18. நமது தொழிலைச் சேர்ந்த விஷயத்திலும், குடும்ப விஷயமல்லாத வேறு விஷயங்களிலும் ஸ்திரீயின் அபிப்பிராயங் கேட்பதாலும், அவரைப்பற்றி ஸ்திரீயிடம் பேசுவதாலும் காரிய பங்கமும் அவமானமுமே சித்திக்கும் என்பதை மறக்கலாகாது.

19. தன் மனைவி எந்த விஷயத்திலும் தன் கட்டளையை மறுக்காமல் நடக்கும் வண்ணம் பழக்கிவைக்காதவன் அவளுக்கும் தனக்கும் பாபத்தை யுண்டாக்கிக் கொள்கிறான்

20. தாய் தந்தையர்களின் மனம் வேதனைப்படும்படி நடந்துக்கொள்பவனுடைய க்ஷேமம் நீடித்திராது. அவர்கள் மனம் சந்தோஷப்படும் வண்ணம் நடந்து கொள்பவன் கடவுள் அருளைப் பெறுவான்.

S. ரங்கப்ப ஞயகர்,
வளியாம்பாளையம்.

நவநீதம்.

1. ஆதியில் தெய்வாம்ஸமுள்ள முதியோர்களால் இயற்றப்பட்ட வேதங்களும், சாஸ்த்ரங்களும் என்றும் பொய்யாகாது. ஆனல் பாரதம் முதலிய நூல்களைப்போன்ற நடையோடு எழுதின

வர்கள் கீழான நோக்கமுற்றவர்களுக்காக அனுஷ்டிக்கும் முறை களைக்கொண்டு எழுதியிருக்கின்றனர். அதனால் சரித்திரம் தவ றல்ல.

2. பாரமார்த்திக பாவப்படி உலகத்தில் மத பிரச்சினையே கிடையாதென்றாலும் லௌகீகபாவப்படி மதங்களால்தான் உலகம் சன்மார்க்க நிலையை யடையவேண்டும். முக்கியமான மதங்கள் இந்து கிறிஸ்துவ மகம்மதிய மதங்களே.!

3. கிருஸ்துவமதம் பிராம்மண தர்மத்தை விசேஷமாககூறி யிருக்கின்றது. மகம்மது க்ஷத்திரிய தர்மத்தை அதிகப்படுத்தி கூறியிருக்கின்றார். இந்து மதம் நான்கு வருணாச்சிரம தர்மங்களை யும் சமநிலைப்படுத்தி கூறியிருக்கின்றது. விபரம் வெளியாகும்.

4. எல்லாவுயிர்களுக்கும் ஆதாரமாகிய சூத்திர தர்மத்தை நிறைவேற்றும் வேளாளர் (அதாவது பயிரிடுங்குடிகளை அக்கிரம மாயவர்கள் சொத்துக்களை அபகரிக்கவும் அவர்களை பயமுறுத்த வும் அவர்கள் முன்னேற்றத்தில் அசிரத்தைகாட்டவும் அவர்கள் சொத்துக்களைக் கண்டு பொறாமைகொள்ளவும் முற்படுகிற எந்த வியாபாரக்கூட்டமும் அரசாங்கத்தவரும் பிராமண குழாங்களும் சீக்கிரம் அழிந்துபோவார்கள். சூத்திரர்கள் ஏரிபோலவும், மற்ற தர்மிகள் அதிலிருந்து பாய்ச்சப்படும் கால்வாய்கள் போலவும் கரு தல் வேண்டும்.

5. இந்த தொல்லுலகத்தில் எப்பொழுதும் தொல்லையே எல்லாருயிருக்கும் சம்பவிக்கும், ஆனால் கீதையின் ;அர்த்தத்தை யுணர்ந்தவர்கள் அதாவது உலக அனுபவத்தில் தேர்ந்த புத்தி யுள்ளவர்கள், இந்த உலகத்தின் கஷ்டங்களைக்கண்டு பயங்கொள் வதில்லை. இப்படிபட்டவர்கள் கோடிக்கணக்காக இப்பொழுதும் இருக்கிறார்கள்.

6. முதலிலார்க் கூகியமில்லை பொறுமை போராடு நன் னெறி பூண்டொழுகினால் ஏற்படக்கூடிய கஷ்டங்களை சகித்துக் கொண்டு நேரான வழிகளில் நடக்கிறவர்கள் பின்னர் ஏராளமான லாபத்தை யடைவார்கள். அற்ப விவேகிகள் அற்ப லாபத்தை யும், பூரண விவேகிகள் அதிக லாபத்தையும் கோருவது இயற்கை

(லாபம் பென்பது பொருள். செல்வமல்ல இன்மை மறுமை களுக்கு ஆஸ்பதமாயுள்ளவைகள்.)

7. உலகத்து செல்வங்களில் உயர்ந்தது முறையே செவிச் செல்வம், கல்விச்செல்வம், மேழிச்செல்வம், பொருட்செல்வம், அருட்செல்வம் முதலியன மனிதர்களும் அவ்வாறே ஒவ்வொன்று யடையவேண்டும் ஆனல் சிலர் திடீரென அருட்செல்வத்துக்காளா வது முன் ஜென்மாந்திரத்தில் விட்ட குறை.

8. கீதை தர்மம் செய்வதற்கு தன்னிடத்தில்வந்து யாசிப் பவர்களின்மனதை ஆராய்ந்துகொடுப்பதுகூடாமை மனதையாரா யும் சக்திவாய்ந்திருந்தாலொழிய மற்றபடி கொடுக்கக்கூடியதை ஒளிக்காமல்கொடுக்கவேண்டும் அயோக்கியதனமாய் யாசித்தால் பாவம் புண்ணியமும் அவனுடையதாகும். இயேசு உன்னிடத் தில் கேட்க்கிறவனுக்கு கொடு என்று சொன்னரே யொழிய அதை இப்படிப்பட்டவனுக்கு தான் கொடுக்கவேண்டும் மென்று சொல்லவில்லை, இதே அர்த்தத்தோடு கிருஷ்ணபகவான் கர்ம யோகத்தில் சொல்லியிருக்கிறர், பலிச் சக்கிவர்த்தி சுக்கிரனு க்கு இதேமாதிரியான சமாதானம் சொல்லுகிறர்

9. மேல் நாட்டில் வெள்ளையர்களைப்போல் நம்நாட்டில் கல் வியிலும், நாகரீகத்திலும், முன்னேரியிருக்கிறவர்கள் பிராம் மணர்களே! அவர்கள் தங்கள் புத்திகோசரமெல்லாம் பொரு ளீட்டலில் செலவிடுவதால் இந்துமதம் சீக்கிரம் அபிவிர்த்தியடைய தடைப்படுகின்றது. அவர்கள் மனம் பரோபகார புத்தியில் திரும்பிவிட்டால் இந்தியா பொன்னுலகமாக மாறிவிடும். பிராம் மணர்களில் உத்தமர்கள் அதிகமாய் காணப்பட்டபோதிலும், பெண்களையும் சுற்றத்தாரையும் திருப்தி செய்வதில் மயங்கி கிடக் கின்றார்கள்.

கைத்தொழில்.

1. **சவுக்காரம் செய்யும் விதம்:-** உழமண் சத்தை 1 படியளவு எடுத்து அதற்கு சமனெடை சுண்ணும்பு கலந்து ஒரு பாத்திரத்தி லிட்டு காய்ச்சி பாகுபதத்தில் கரண்டியில் மொண்டு பில்லை

பில்லையாக ஊற்றி மொத்தமாக கடையில் கொண்டு போட்டு விடலாம்.

2. **துணிசோப் செய்யும் விதம்** கிளிஞ்சல் சுண்ணாம்பு 1 சேர் மாட்டுக்கொழுப்பு ½ சேர் சோடாபவுடர் 2 பலம் சுத்தஜலம் ½ பவுண்டு விட்டு ஒரு பாத்திரத்திலிட்டுகாய்ச்சி வெல்லப்பாகுபதத்தில் அதாவது பாகு கையில்ஒட்டாமலிருக்கும்பக்குவத்தில் வேண்டியபவுடரை தூவி கிளரி கீழே இறக்கி அச்சுகளில்வார்த்து டஜன் டஜனாகவைத்து பாக்செய்து கடைகளில் போட்டுவிடலாம்.

3. **சகல விஷங்களுக்கும் மைடப்பி** எட்டி மரத்தில் விளாங்காய் பூரும்படியான துவாரம் செய்து பழம்புளியை கொட்டை முதலானதுகள் நீக்கி உள்ளேவைத்து அந்தஎட்டிமரத்தினாலே ஆப்படித்து மண்பூசி 40 நாள் சென்றவுடன் எடுத்து எட்டிமரத்திலேயே டப்பிசெய்து அதில் அடக்கம்செய்துக்கொண்டு, தேள், நண்டுதெருக்கால, எலிகடி, பூனை, பெருச்சாளி பச்சோந்தி வண்டுகடி, செய்யான்கடி முதலியவைகளுக்கு மிளகு பிரமாணம் ஒருவேளைமேனிக்கு வெற்றிலையில் மடித்து சொல்லாமல் கொடுக்கவும். பத்தியம் பச்சரிசியும் பிடி முருங்கயிலையும் போட்டு கஞ்சி காய்சி கொடுக்கவும், உப்பு ஆகாது கடும்பத்தியம் மூன்று நாளைக்கு ராலை, மாலை இரண்டுவேளையும் சாப்பிடவும் இதேமாதிரி செய்து வைத்தியர்களுக்கு விற்கலாம்.

4. பன்னீர்செய்யும்விதம் எந்த புஷ்பத்திலிருந்து பன்னீர் செய்யவேண்டுமோ அந்த புஷ்பத்தை கொண்டுவந்து ஓர் பெரிய பானையில் அடியில் பரப்பி மேலே உப்பை பாம்பி அதன் மேல் புஷ்பத்தை பரப்பி அதன்மேல் உப்பை பரப்பி இப்படி அடுக்கடுக்காய் பாக்செய்து பானையை மூடி பூமியில் புதைத்து வைத்துவிட்டு 20 நாள் சென்றெடுத்தால் தண்ணீராகயிருக்கும் அதை வாலைவைத்து இறக்கினால் உயர்த்த பன்னீராகும் அதை புட்டிகளில் பாக்செய்து சீல் பண்ணி விற்பனைக்கி தயார் செய்யலாம்.

5. தேள் கொட்டுக்கு விற்கும் பிள்ளைகள் செய்யும் விதம் அரக்கு 1 சேர் காஸ்லின் சோடா 2 பலம் குங்கிலியம் 1 பலம் துத்தம் 2 பலம் சேர்த்து கற்பூரதிராவகம் விட்டு காய்ச்கி கட்டி பதத்தில் பில்லைசெய்து எடுத்துகொள்ளவு ம்தேள்கடி முதலிய கடிகளுக்கு அனல் கொளுத்தி இந்த கல்லை ஒட்டிவிட்டால் விஷம் சக்கினவுடனே கீழேவிழுந்துவிடும்.

தொடரும்.

அரசியல் ஞானம்

ஜவாப்தாரி ஆக்ஷி

தேவபுரி பஞ்சாயத்து கோர்ட்.

காலம் முற்பகல்

இடம் கிராமகோர்ட்

அக்கிராசனுதிபதி:- சுமதி (சுக்த†மதி), பஞ்சாயத்தார் சமாதானம் பிள்ளை, 2. ஜனநேசம் செட்டி, 3. வேணுகோபால் முதலியார், 4. அருளுடையார், 5. எசடியான், 6. சையத்பெக்சாயபு

ஷியூர் S. சுப்பையன் என்பவன் பேரில் பொய்சொல்லி ஏமாற்றியதாக கேஸ்.

வாதி:- சிவநேசஞ்செட்டி (சித்தரகிரி கிராமம்)

பிரதிவாதி:- வண்டிக்கார சுப்பையன் (தேவபுரி)

அக்கிராசனுதிபதி:- சபையோர் எழுந்து கடவுள் வாழ்த்து பாடி முடிந்தபிறகு ராஜ பிரமாணம் செய்துவிட்டு ஆசனத்தில் அமருகிறார்கள்.

சுமதி:- எழுந்து அண்டமெல்லாம் பறந்துள்ளானின் அருள் பெருக்கின எழ்மையும், அடிமைபுமாயிருந்த நம்க்கு ஆங்கிலஆக்ஷியின் அருளால் அரசுபுரிய அதிகாரம் பெற்றதற்காக நாம் நன்றி உள்ளவர்களாயிருப்பதொடு நாம் அதிகாரத்தை துர்வினியோகப்படுத்தாமல் நம் மூலியமாய் அரசனுக்கு நல்ல பெயரடைய பிரயாசை எடுத்துக் கொள்வோமாக.

சுமதி:- உட்கார்ந்து முதலாவதாக நம்மெதிரில் வந்திருக்கும் கேஸை பரிசீலனை செய்ய நாம் இனி ஆரம்பிக்கவேண்டும். என்று பஞ்சாயத்தாரை பார்த்து சொல்லுகிறார்.

பஞ்சாயத்தினர்:- ஆபீஸ்வேலையிருக்கின்றது மேலுக்கு சிலரிப்போர்ட்டுகள் அனுப்பவேண்டியிருக்கின்றன அடுத்ததேதிக்கு விசாரணை ஒத்தி வைக்கலாம்.

சுமதி:- அப்படியல்ல அற்பவிஷயத்துக்காக நாம் ஏன் அவர்களை காக்கவைக்கவேண்டும் முக்கியமாக கேஸ் விசாரிப்பதுதான் நமது கடமை ஒழிந்த நேரங்களில் மற்ற விஷயங்களை கவனிக்க வேண்டியது.

கிராமசேவகன்:- சிவநேசஞ் செட்டியார் என்று கூப்பிடுகிறான்.

சிவ:- கோர்ட்டுக்குள் வந்தார்.

சுமதி:-உம்முடைய தாவா எது.

சிவ:- நேற்று காலை சித்திரகிரியிலிருந்து பொன்னமாபுரி போவதாக நானும் என்மனைவியும் வந்தோம் அதற்காக ஓர் போக்கு வண்டியை எதிர்பார்த்தோம். சுப்பையா என்பவர் எதிரில் வந்து தான் சீக்கிரம் எங்களை கொண்டுபோய் ஊரில் சேர்ப்பதாக பேசி முடித்து வீட்டுக்கு அழைத்து சென்றார் பத்துமணிவரைக்கும் காத்திருந்து பிறகு அவரை துரிதப்படுத்தினேம் அவர் மாடு வயலுக்குழப்போயிருந்ததால் 12 மணிவரைக்கும் இதோ ஆச்சுது என்று உற்சாகப்படுத்திக்கொண்டேயிருந்தார்.

மாடு வந்த பிறகு அவர் தமயனார் மாட்டின் கஷ்டத்தை நோக்கி சாயங்காலம் வண்டி கட்டுவதாக சொன்னார் இராத்திரி 8 மணிக்கு வண்டி தயாரானது நாங்கள் இருட்டுகாலமானதால் போக சம்மதப்படவில்லை

எங்களுக்கு சாப்பாடு சிலவு நேற்று 1 ரூ. ஆகிறது அவசரமாய் போகவேண்டிய காரியத்தில் நஷ்டமேற்பட்டிருக்கிறது காலத்தை வீணாய் கழித்ததற்காக கடவுளுக்கு பதில் சொல்லவேண்டிய பகுதி இருக்கிறது.

எதிரி தங்களின் சுய லாபத்தை கோரி அசட்டுத்தனமாய் எங்களை தாமதப்படுத்தி விட்டார். ஆகையால் விசாரித்து நீதிசெலுத்தக்கோருகிறேன்.

சுமதி:- சுப்பையா இந்த பிராதுக்கு என்ன பதில் சொல்லுகிறாய்.

சுப்:- நான் வண்டி கொண்டு வருவதாக சொன்னது வாஸ்தவம். ஆனால் வீட்டில் சில அசந்தர்பங்களினால் தாமதப்பட்டது. நான் வேணுமென்று அப்படி செய்யவில்லை.

சுமதி:- நீ வீட்டுக்குப்போனதும் மாடு தயாராக இல்லாததினால் என் அவர்களுக்கு வேறு ஒன்றை பார்த்துக் கொள்ள எச்சரிக்கப் படாது.

சுப்:- மாடு சீக்கிரம் வந்து விடுமென்பது எனது நோக்கம்.

சுமதி:- மாடு வந்த பிறகாவது என் அப்படி செய்ய வில்லை.

சுப்:- அதற்கு என் தமையனார் மாட்டின் கஷ்டத்தை நோக்கி தடை செய்து விட்டார்.

சாயங்காலம் வண்டி கட்டுவதற்கு இவர்கள் ஒப்பவில்லை.

சுமதி:- சரிதான்' நீ செய்த குற்றத்திற்கு என்ன சமாதானம் சொல்லுகிறாய்.

சுப்:- நான் என்ன தப்பு செய்தேன்.

சுமதி:- எது உனக்கு விளங்க வில்லையா?

சுப்:- எனக்கு தப்பே தோன்ற வில்லை.

சுமதி:- அவர்களை ஒரு நாள் முழுதும் காக்கவைத்ததினால் சாப்பாடு முதலிய சிலவுகள் ஆயிருக்கின்றதே?

சுப்பை:- அவர்கள் வீட்டிலிருந்தால் சாப்பிடுவதில்லையா?

சுமதி:- சரிதான்! அங்கு சில்லறை பணச்சிலவு பிடிக்காது.

பஞ்சாயத்தாரைபார்த்து இதற்கு என்ன ஆலோசனை கூறுகிகிறீர்கள் என்று சொன்னார்.

சமாதானம்பிள்ளை:- இது எது சம்மந்தமான வழக்கு சுமதி கிரிமினல் சம்மந்தமான வழக்கு

சமா:- அசுட்டுதனமாக ஏதோ சில வார்த்தைகளை சொல்லி விட்டதினால் குற்றமாகுமா?

சுமதி:- குற்றந்தான் ஒருவருக்கு இடையூறு உண்டாக்குகிறதெல்லாம் குற்றந்தான்.

சமா:- வண்டிக்காரன் எப்பொழுது தாமதப்படுத்துகிறானோ அப்பொழுது ஏன் செட்டியார் வேறு வண்டியை தயார்செய்துக்கொள்ளப்படாது.

சுமதி:- இவன் அசட்டுத்தனமுள்ளவனென்று அவருக்கு முதலில் எப்படி தெரியும்.

சமா:- இது கிரிமினல் கோட்படி எந்த செக்ஷன்படி குற்றமாகும்.

சுமதி:-இது செக்ஷன்படி குற்றமாகாவிட்டாலும். இப்பேர்ப்பட்ட அற்பகுற்றங்களை களைவதற்காகதான் கிராமகோர்ட் ஏற்பட்டிருக்கிறது கிராமகோர்ட்டுக்கு நியாயமென்று தோன்றினால் சிக்ஷைவிதிக்கலாம்

சமா இவன் வேணுமென்று செய்ததாக தெரியவில்லையே?

சுமதி இப்படியே வண்டிக்காரர்கள் பலவிதமான கெடுதல்கள் பிரயாணிகளுக்கு செய்வது எனக்கு தெரியும் சில சாயபு வண்

டிக்காரர்கள் ஒருவழியில் மிரட்டி பயப்படுத்தி வண்டி சத்தத்தை அதிகமாய் வாங்கிவிடுவதும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இவனை கிக்ஷை செய்வது மற்றவர்களுக்கும் ஞாபகார்த்தமாகதான்

அருளுடையார் இந்த சிறுவன் எனக்கு தமக்கைப் பிள்ளை ஆகையால் முதல்தடவை மன்னிக்ககோருகிறேன்

சுமதி மன்னிப்பதுதான் தாழ்வான கிக்ஷை விதிக்கலாமென்பது என் நோக்கம் (வேணுகோபால் முதலியார்) பொய்சொல்லி எமாற்றினது எந்த செக்ஷன்படி ஜட்ஜிமெண்ட் எழுதுவது.

சுமதி நீர் அந்த நவீன ஆபாச கோர்ட் வழக்கங்களை கவனித்தவர்போல் தோன்றுகின்றது இந்த கோர்ட்டில் எழுத்து மூலயமான நியாயம் அவசியம் வேண்டியதில்லை.

முதலியார் மேலிருந்து கேட்கும் கேள்விகளுக்கு யார் பதில் சொல்வது அற்பவிஷயத்துக்கெல்லாம் அவர்கள் திருப்பி திருப்பி கேள்விகேட்டு சமாதானம் வாங்குகிறார்களே ? இந்த அற்ப விஷயத்தை தள்ளி ஒழிக்காமல் நீர் சிரத்தை எடுத்துகொண்டீர்களே!

சுமதி:- அப்படியா? நீங்கள் கோழைகள் நாம் அவ்வளவு அசட்டுதனமாக இருந்து விட்டால் இதனால் எத்தனை தீங்குகள் அதிகரிக்கும். நாம் ரெயில் வண்டி தொடரின் வண்டியோட்டி போல் இருக்கிறோம் என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். குற்றவாளியை பார்த்து நீ குற்றவாளியல்லவா! என்று கேட்டார்

சுப்பை:- குற்றவாளிதான்.

தீர்ப்பு சுமதி:- இது முதல் கேசானதாகவும் நீ முதலாவது குற்றவாளியாகவும் வந்திருப்பதால் எதிரிக்கு சிலவு ரூ. 0—8—0 வும். கோர்ட்டுக்கு ரூ. 0—8—0 வும். நஷ்டம் கொடுக்க வேண்டியது. பஞ்சாயத்தாரில் ஒருவர் தவிர மற்றவர்கள் ஒற்றுக்கொண்டார்கள்

உடையார்:- சாக்ஷி விசாரிக்காமல் எப்படி தீர்ப்பு செய்வது.

சுமதி:- இருகக்ஷிகளும் விஷயங்களை ஒற்றுக்கொண்டிருக்கும்போது சாக்ஷி அவசியமில்லை.

உடையார்:- மேல்கோர்ட்டுகளில் குற்றவாளி குற்றத்தை ஒத்துக்கொண்டும் சாக்ஷியில்லையென்று தள்ளி விடுகிறார்களல்லவா

சுமதி:- அப்படிப்பட்ட ஆக்ஷி முறையின் கொடுமைக்காகதான் நம்மை எற்ப்படுத்தியிருக்கிறார்கள்.

ஜவாப்தாரி ஆக்ஷி முறையில்

கிராம நிர்மாணம்.

---

40 பக்கம் தொடர்ச்சி

கேள்விப்பட்டதில்லை நாளுக்குநாள் தங்களை கல்வியிலும், நாகரீகத்திலும், சாதுர்யத்திலும் உயர்த்திக் கொண்டுபோகும் மாக்கள் இவ்வித அற்பவிஷயங்களுக்கெல்லாம் பயப்படமாட்டார்கள். இவைகளெல்லாம் சோம்பேரிகள் கூற்று. பள்ளிக்கூடஸ்தாபனங்கள் கல்வி அதிகரிக்க அதிகரிக்க ஜனங்கள் ஜீவனோபாயமான பயிரிடுந்தொழில்கள் நெசவு, சிற்பங்களில் சிரத்தை வையாமல் வியாபாரம் உத்தியோகமுதலிய தேக அசைவில்லாத சோம்பேரிவேலைகளில் பிரவேசிக்கிறார்கள். இப்பொழுது லக்ஷக்கணக்கானபேர்கள் படித்துவிட்டு உத்தியோகத்தை எதிர்நோக்கிநிற்கின்றனர். சோம்பேரித்தனமாய் பட்டினி கிடப்பினும் கிடப்பரேயன்றி அவர்கள் கையால் சிறுவேலையாவது செய்ய கூச்சம்கொள்ளுவர். இவ்வித விஷயங்களை பரிகரிப்பதற்காக இனி பள்ளிக்கூடங்களில் தொழில், கல்வி ஆரம்பிக்கப்படவேண்டும் கல்வியென்பது மனித சமூகத்தின் காலத்தில் ஓர் பாகமாய் நிற்கவேண்டுமேயொழிய, பூராவும் கல்விகற்பிக்கும் காலமாய் கழிக்கக்கூடாது. அதனால் பலக்குறைவு சித்தப்பிரமை முதலிய விபத்துகள் நேரிடுகின்றன. சிறுவயது முதற்கொண்டே தன் சரீர பிரயாசையால் உண்ண உடுக்க கற்பிக்கக்கப்படவேண்டும். அப்படி செய்வதனால் தாய், தகப்பன்மார் தங்கள் பிள்ளைகளுக்கு ஊரையடித்து பொருள்சம்பாதித்து வைக்கவேண்டியதில்லை. (இது விஷயம் பின்னர் விவரமாக கூறுவோம்) இதேமாதிரியே பள்ளிக்கூட உத்தியோகஸ்தரும் நாள் முழுதும் வித்தையிலேயே செல்வழித்தல் கூடாது.

பொதுவாக உலகத்திலுள்ள உத்தியோகஸ்தரும், வியாபாரிகளும் உபதேசிகளும் தன் காலத்தில் ஓர் பகுதி பிறப்புரிமை என்னும் தர்மத்தை சிறப்பாக நடத்துவதற்கு சமூகவளர்ச்சிக்கு ஆதாரமாயுள்ள ஆக்கும் சக்தியில் உழைக்கவேண்டும் ஓர்பகுதி அழிக்கும் சக்தியிலும் ஆளும் சக்தியில் செலுத்துவது சமரஸமான தர்மமுறை. இது மனித சமூகத்துக்கு உற்சாகத்தை விளைவிக்கக்

கூடிய அம்ஸம். ஒரே தொழிலே செய்வதினால் அடிக்கடி சோம்பலும் சலிப்பும் உண்டாகின்றன.

உபாத்தியாயர்கள்—காலை 5 மணிமுதல் 10 மணி வரையில் பள்ளிக்கூடங்களில் உழைத்தபிறகு பிற்பகலில் பிள்ளைகளுக்கோ மற்றவர்களுக்கோ தொழில் கற்பிக்கும் முறையில் இரண்டொருவர் அனுஷ்டிக்கலாம். மற்றவர்கள், தபால், காடு, பாதை, ஏரி, குளம் முதலியவைகளை ரிப்பேர் முதலிய விஷயங்கள், பயிர்த்தொழில் ஸ்தாபனங்கள் தொழில் ஸ்தாபனங்கள் தர்மஸ்தாபனங்கள் கிராமசேவகம் வயித்தியம் சுகாதாரம் முதலிய விஷயங்களில் உழைக்கவேண்டும்.

பள்ளிக்கூடம் 5 அல்லது 6 சதுரமைலுக்கு இடையில் ஸ்தாபிக்கவேண்டும் ஏழுவகுப்புகளும் ஏழு உபாத்தியாயர்களுமிருக்க வேண்டும். உபாத்தியாயர்களுக்கு சம்பளம் லோகல் கிராண்டிலிருந்தும் எலிமெண்டரி கிராண்டிலிருந்தும் பாதினாலுக்கு பாதி சம்பளம் கொடுபட வேண்டும் பாதி சம்பளத்திற்காக எந்தவேலை செய்கிறார்களோ அதிலிருந்து ஊதியத்தை பெறவேண்டும் அப்படியானால்தான் அவர்கள் அந்த வேலையில் ஊர்ஜிதமாய் உழைக்க கூடும்

பளளிக்கூடகாலம் எந்த பள்ளிக்கூடமும் காலை 5 மணிமுதல் 10மணிக்குமேல நிலவலாகாது.

3. பயிர்த்தொழில் ஸ்தாபனம் இந்தியாவில் பயிர்த்தொழில் மிகவும் முக்கியமான தொழில் என்பது பொருந்தும். இத்தகைய தொழில் இப்பொழுது குலைந்த நிலைமையிருக்கின்றது. பயிரிடுவதற்கு முதலாவது சாமான்கள் தயாரிருக்கப்படவேண்டும்.

கூலி ஆள்கள் இந்தியாவிலிருந்து கோடிக்கணக்கான பேர்கள் வெளிநாடுகளுக்கு போய்க்கொண்டிருக்கின்றார்கள். இந்நாட்டிலும் தொழிலில்லாமல் பிச்சை எடுத்துண்ணும் ஜனங்கள் கோடிக்கணக்காய் இருக்கின்றார்கள் ஆகையால் இந்தியாவில் ஆள் வசதிக்கு குறைவில்லை.

நிலம் லக்ஷக்கணக்கான சதுரமைல் விஸ்தீரணமுள்ள தரிசு நிலங்களிருக்கின்றன. இந்தியாவில் 100 கோடி ஜனங்கள் வரையில் பிறநாடுகளை எதிர்பாராவண்ணம் பிழைக்கக்கூடிய நிலவசதிகளும் ஜீவனோபாயங்களுமிருக்கின்றன.

வர்த்தமானம்.

1. ஸ்ரீ மகாத்மா காந்தியடிகள் சின்னாட்களாக ஆமதாபாத்தில் தமது சொந்த சத்தியாசிரக ஆச்சிரமத்திலிருந்து கொண்டு வாலிபருக்கு சமரஸக்கல்வியும், சமயசம்பந்தமான உபதேசங்களும் செய்துக்கொண்டிருக்கின்றார்.

2. ருமேனியாவிலுள்ள உப்பு சுரங்கத்திலுள்ள ஜோஸாப் காலரியில் மனிதருடைய ஒளியைப்போல் பதினாறு மடங்கு எதிரொளிக்கத்தக்க கட்டிடமிருக்கின்றதாம்.

3. **இரையுண்ணுமீன்:-** பிரிட்டிஷ் மீன் காக்ஷி சாலையில் உள்ள சில மீன்கள் ஐந்து வருஷத்திற்கொருதரம் இரை எடுக்கிறதாம்.

4. **ரயில்ஜார்ஜ் குறைத்தல்:-** அடுத்த ஜனவரி-மீ முதற்கொண்டு 50 மைலுக்கப்பாலுள்ள இடங்களுக்கு மைலுக்கு 3 பைசா வீதம் குறைக்கப்பட்டிருக்கின்றது. 50 மைலுக்குட்பட்ட இடத்திற்கு இப்பொழுது இருப்துபோல $3\frac{1}{2}$ பைசாதான் கட்டணம். இப்படி செய்தது பணக்காரர்களுக்குதான் சௌக்கரியம். ஏழைகள் 50 மைலுக்குள்ளாகத்தான் பிரயாணம்செய்வார்கள் அவர்கள் மனக்கவலையை கம்பெனியார் கவனிப்பார்களா?

5. **உலகத்தில் பேரிய கப்பல்:-** ஆயிரமடி நீளமுள்ள ஒரு பெரிய கப்பலை இங்கிலாந்தில் கட்டபோகிறார்களாம் அது பூலோகத்திலிருக்கின்ற கப்பல்களிலெல்லாம் மிகவும் பெரியதாம்.

6. **பெரும்புயற் காற்று:-** பெர்முடாசுக்கு தெற்கே புயற்காற்றினால் ஒருகப்பல் முழுகிபோய் விட்டதாம் சிலர்க்கு உயிர் சேதம்.
பீனேஸ் என்ற தீவில் அடித்த பெரும்புயற்காற்றால் 39 பேர் மரணம். பொருட் சேதம். 300 கோடி ரூபாய்கள். பலபட்டணங்களும், பயிர்களும் நாசமாக்கப்பட்டன.

7. **சீதனம்:-** அமெரிக்கா கோடீஸ்வரரான ஹென்றி போர்டின் மகள் போலத்தின் முதல் மந்திரியாயிருந்த மு. ஸ்கிகிரிலிக்கி என்பவரை கலியாணம் செய்துக்கொள்ளப் போகிறாராம். ஹென்றிபோர்ட் தமது அருமை மகளுக்கு 60 கோடி ரூ. சீதனமாக கொடுக்கப் போகிறாராம்.

மூந்துங்கள் ! மூந்துங்கள் !

ஜோதிட சாஸ்திர முறைப்படி

தயார்செய்யப்பட்ட "ரக்ஷாபந்தனம்" அல்லது தாயித்து

நவக்கிரக ரக்ஷை:—

இதை அணிந்து கொள்வதால் நவக்கிரக திசா புக்தி அந்தரங்களில் ஜாதகப்படி நடக்கக்கூடிய கெடுதலான காலங்களில் கஷ்ட பலன்களைக் கொடுக்காமல் சுப பலன்களைக் கொடுக்கும்.

இதன் விலை ரூ. 4—0—0

ஹநுமான் ரக்ஷை:—

இதை அணிந்து கொள்வதால் சகல விதமான ஆபத்திலிருந்தும் தப்புவிக்கும் எப்பேர்பட்ட வியாதியையும் சொஸ்தஞ் செய்யும் சகலவித பேய் பிசாசுகளையும் பறந்தோடச்செய்யும். சகல காரியங்களும் சித்தியாகும்.

ரக்ஷை 1-க்கு விலை ரூ. 3-8-0

இதர விஷயங்களுக்கு ஸ்பெஷலாக ரக்ஷாபந்தனம் தயார் செய்து கொடுக்க சார்ஜ் ரூ. 10 முதல் 200 வரை.

நற்சாட்சி பத்திரம்.

டெர்னி கிராமம், ஷாபூர்குடிகார் போஸ்டு
பீகார் மாகாணம்.

ஐயா!

சில தினங்களுக்கு முன் என் தமையனுக்கு சில கேசுகள் ஜயமாகவேண்டிய விஷயமாக தங்களிடம் ஒரு ஹநுமான் ரக்ஷா பந்தனம் ஸ்பெஷலாய் தயார்செய்து வாங்கி என் தமையனுக்கு அனுப்பினேன். அதனை தரித்துகொண்ட பிறகு என் தமையன் சம்சாரத்தின் சொர்ப்பனத்தில் ஸ்ரீ அனுமார் வெள்ளையுடையுடன் கையில் பச்சைக்கொடி ஏந்தி பிரசன்னமாய் கேசுகள் ஜயமடையுமென்று சொன்னார், அந்தப்படியே கேசுகள் ஜயமடைந்த சங்கதியைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொண்டேன்.

(ஒப்பம்) அவதானந்த பிரசாத்

மற்ற விவரங்களுக்கு அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

விலாசம்:— மானேஜர்,

மலையாள மாந்திரீக ஜோதிட ஆபீசு

விழுப்புரம் போஸ்டு. (தென் ஆற்காடு ஜில்லா)

இயூகலிப்டஸ் காந்த கரைப்பு தைலம்.

1. எல்லாவித காயங்கள், வெட்டுகள், புரையோடுகிற ரணங்கள், நெருப்பு, வெந்நீரில் வெந்த புண்கள், முள்பட்ட விடங்கள், கல்லடித்த காயங்கள், முதலியவைகளின்பேரில் சுத்தமான துண்டு துணியை திராவகத்தில் நனைத்துபோட நோவு உடனே நின்று காயங்கள் ஆரிவிடும்.

2. தலைநோவு, தலைகுடைச்சல், கண்வலி, பல்வலி வீக்கங்கள், கண்கட்டி, சைத்தியத்தினால் தொண்டை வீக்கம், வாய்வுபிடிப்புகள் முதலியவைகளுக்கு நோயுள்ள இடங்களில் பஞ்சியில் நனைத்து தேய்க்க பூரண சுகந்தரும்.

3. நரம்புசிலந்தி, சீழ்பிடித்த இடங்கள், கட்டிகள், நடந்ததினாலாவது, தூங்கினதினாலாவது, ஏற்பட்ட கை, கால், கழுத்து பிடிப்பு, முதலியவைகளுக்கு அடிக்கடி தேய்க்கவும்.

4. பிரசவத்தினாலாவது, வேறு காரணங்களினாலாவது, ஜன்னி பிறந்தால் வேளை 1-க்கு 1 அவுன்ஸ் தைலம் மேனிக்கு தேகமுழுதும் தேய்க்க வேண்டும். சுகப்பிரசவமாகாவிட்டால் வயற்றின்பேரில் திராவகத்தை தடவ சுகப்பிரசவமுண்டாகும்.

5. இருமல், மார்சளி, சக்குவான் முதலியவைகளுக்கு தைலத்தை பஞ்சில் நனைத்து மூக்கில் வாசனை பார்ப்பதோடு தொண்டை நெஞ்சி குழிகளில் தைலத்தை தேய்க்கவும்.

6. பாம்புமுள், மீன்முள், முதலியவைகளின் விஷமுள் பட்டாலும், தேள், நண்டுவாக்களி, பூரான் முதலிய விஷபூச்சுகள் கடித்தாலும் கடித்த இடத்தில் திராகவத்தை சூடுண்டாகும்படி தேய்த்து அனல் கொடுக்கவும்.

7. **உள்ளுக்கு உபயோகிக்கும் விதம்:-** சுரம், பித்த சுரம், வாத சுரம் முதலியவைகளுக்கு வெந்நீரில் 10 முதல் 15 துளி விட்டு 3 வேளை கொடுக்க பூர்ண சுகம் தரும்.

8. சீதபேதி, உஷ்ணம், நீர் சுருக்கு இவைகளுக்கு இரண்டு துளிகள் வெந்நீரில் உட்கொள்ளவும்.

9. வாந்தி, ஓக்காளம், பேதி, காலரா, அஜீரணம் கழிச்சல், முதலியவைகளுக்கு 10 முதல் 15 துளி வரையில் கொடுக்கவும்.

10. நூர்நாற்றுங்களுக்கும், பிரேதங்களுக்கும், வாசனை காட்டலாம்.

உயர்ந்தது புட்டி 1-க்கு	0—6—0
இரண்டாந்தரம்	0—4—0
பெரிய புட்டி 1-க்கு	4—8—0

சமாசம் ஆபீஸ், விழுப்புரம்.

சுதந்திரமென்னும் விந்தையை நாட்டினார்—என்ற மெட்டு.

ஒற்றுமை.

1\. ஒற்றுமையென்னும் விதையை நாட்டுங்கள்—உலகம்போற்று
உறுதியுடன் சினத்தை ஓட்டுங்கள்
பெருமை கீர்த்தியில் பிரியம் வைத்து
பிளவுபடாமல் மதத்தை சார்த்து. (ஒற்றுமை)

2\. மனிதரென்னுசமரச திட்டமே—மூவுலகினும்
மாறிடாத தேவ கூட்டமே
இந்துமகம்மதிய கிறிஸ்தவரெல்லாம்
இந்தியமாதாவின் புத்திரரல்லவோ. (ஒற்றுமை)

3\. அன்பென்றும் ஜலத்தை ஊற்றுங்கள்—அவநம்பிக்கையெனும்
ஆபாத களையை கிள்ளுங்கள்
அடிமைகளாய் வாழுவோர்க்கு ஆங்கார
ஜாதிமத பேதமெங்கே. (ஒற்றுமை)

4\. எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்—இசைவான கல்வி
கேள்விகளில் மூத்தால் வாழலாம்
வீணில்ஆசையை பெருக்கி அன்னியர் நகைக்க
ஆளுவோர்பகைக்க அவதிப்படவோ (ஒற்றுமை)

5\. சுயநலத்தை தூர ஓட்டுங்கள்—சுந்தரவரதன்
செப்பு மொழியில் நாட்டம் வையுங்கள்
எக்கஷ்டம்வரினும் சலியாதிரு லியாதிரு
மெலியாதிரு ஜெயம் பெறலாம். (ஒற்றுமை)

என் கவலைப்படுகிறீர்கள்?

ஹனுமத் உபாசனை!

ஆச்சரியமான ஜோதிடம்!!

சகோதரர்களே!

உங்களை ஆயாசப்படுத்தும் முக்கியமான விஷயங்களைப் பற்றி சில கேள்விகளை எழுதி கவரில் நன்றாய் அடக்கம் செய்து சீல் முதலியவைகள் செய்து அனுப்புங்கள். உங்கள் கவரை திறக்காமலே உங்கள் மூக்கில் விரலைவைத்து திகைக்கும்படி சரியான பதிலுடன் உங்கள் கவரையும் சேர்த்து உங்களுக்கு அனுப்பப்படும். கேள்வி எழுத ஆரம்பிக்கும் சமயத்தில் மணி மினிட்டு அல்லது நீங்கள் ஜனன, மரண, வருஷம், மாதம், தேதி, நாழிகையாவது குறிப்பிட்டு எழுதுங்கள். சட்டவிரோதம், களவு முதலியவைகளுக்கு பதில் கிடைக்கமாட்டாது. உங்கள் கவலை நீங்கி பாக்கியத்திற்கு வழி பிறக்கும்.

கிரஹ தோஷத்தினால் ஏற்படும் சகலவிதமான கெடுதல்களுக்கும், சாந்தி, ஹோமம், ஜெபம் முதலியவைகள் செய்து ரக்ஷாபந்தனம் செய்து கொடுக்கப்படும்.

சார்ஜுகள்:—1-முதல் 5-கேள்விகளுக்கு ரூபாய் 1—0—0 ஐந்துக்கு மேல்பட்ட கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் அணா எட்டு வீதம். ஒரு வருஷ பலன் திசாபுக்தி, அந்தரம் வாரியாய் பலன் எழுதியனுப்ப ரூபாய் 5—0—0. ஸ்ரீ அனுமார் ரட்சாபந்தனம் வெள்ளியில் ரூபாய் 3. அணா 8. தாம்பரம் ரூபாய் 2. அணா 8. தபால் சார்ஜ் வேறே. வெளிநாடுகளுக்கு இரட்டிப்பு கட்டணம்.

T. S. கிருஷ்ணசாமி அய்யர்,

ஜோதிஷர்.

மலையாள மாந்திரீக சாலை

விழுப்புரம் போஸ்ட், ஸௌத் இந்தியா.

ச ம ர ஸ ம்

ஓர் நவீன தமிழ் மாதாந்தர பிரசுரம்.

தமிழ் பெருந்தகையீர்!

இப்பத்திரிகை எழைகளின் முன்னேற்றத்திற்காகவும் இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் குடியரசு கிராமாக்ஷிமுறைகளில் பஞ்சாயத்து சட்டதிட்டங்களும் மணியம் கர்னங்கள் அனுஷ்டிக்க வேண்டிய புதிய விவகார விஷயங்களும் இக்காலத்துக்கேற்ற யுக தர்மங்களடங்கிய, பிழைக்கும்வழி, வாழ்க்கை நலம் கல்வி, கைத்தொழில், சுகாதாரம் வைத்தியம் விவசாயம். வர்த்தமானம், ஸ்திரீ சிறுவர்களுக்கேற்ற பகுதிகள் சமரசசன்மார்க்கசதாசாரம் தேசிய கீதங்கள் முதலிய வியாசங்களடங்கிய வெளியுலவும். உபாத்தியாயர்கள் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது.

அரசியல் ஞானம், சமய ஞானம், சமூக ஞானம், முதலியவைகளை தெள்ளென விளக்கிக்காட்டுவதோடு பாரமார்த்திக லௌகிக விஷயங்களை விபரமாக தாங்கி வெளியுலவும் மேல் நாட்டு கைத்தொழில் சிற்பங்களில் 1000 முறைகள் விவரித்துக் காட்டப்படும்.

குடியானவர்களின் உபயோகத்திற்கென்றே பிரசுரித்து வருவதால் பயிரிடுவோருக்கு இஃதோர் சிந்தாமணியாகும்.

சில காரணங்களை முன்னிட்டு வேறு அச்சியந்திரசாலைக்கு மாற்றப்பட்டதினாலும், சந்தாதார்கள் சீக்கிரம் சந்தா தொகை கட்டுவதற்கு தாமதப்படுவதாலும், காலதாமதமாய் வெளிவரப் பட்டது, இனி அவ்விதம் நடைபெறுதென்பது திண்ணம். முன்னடியே சந்தா தொகை கட்டிவிட்ட கபடற்றவர்களின் தர்மத்தினால்தான் இது தொடர்ந்து வருகின்றது.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா ரூபாய் 1. வெளி நாடுகளுக்கு ரூபாய் 1—4—0. தனிப்பத்திரிகை அணா 2.

சந்தாவை மணியார்டர் செய்தால் ரூ 1—2—0 தான் ஆகும். வி. பி யில் அனுப்புவதில் ரூ. 1-5-0 ஆகும் விலாசம் மாறும்போது தெரிவிக்க வேண்டும். வராத் தவறிய பத்திரிகைகளை அம்மாதத்திற்குள் எழுதினால் அனுப்பிவிடப்படும். பதில் விரும்புவோர் ரிப்ளை கார்டு, அல்லது ஸ்டாம்பு அனுப்புவதே நலம்.

☞ எல்லா கடிதங்களும், மணியார்டர்களும், போஸ்டல் ஆர்டர்களும் அடியில் கண்ட விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

எம். இராமாநுஜம்,
மானேஜர், சமரஸம் ஆபீஸ்,
விழுப்புரம்.